**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**முன்னிலை : செல்வி.எஸ். ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

**நீதித்துறை நடுவர், திருவையாறு.**

**2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 18–ம் நாள் சனிக்கிழமை**

**<u>Cr.M.P.No.580/2025</u>**

ராஜ்குமார்,
த/பெ. பரமசிவம், ... மனுதாரர்/எதிரி

//இடையே//

அரசுக்காக:–காவல் ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
கு.எண்.339/2025 ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது மனுதாரரால் பிரிவு 497 & 503 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு 18.04.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. முகேஷ் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும், ,

**<u>உத்தரவு</u>**

**1)** மனுதாரர் இவ்வழக்கில் எதிரி/ செல்போனின் உரிமையாளர் ஆவார். மனுதாரரின் **VIVO Mobile Phone**–ஐ காவல் துறையினர் கைப்பற்றியுள்ளதாகவும், மனுதாரர் மட்டுமே செல்போனின் உரிமையாளர் என்றும், மேற்படி செல்போனின் மீது வேறு யாருக்கும் உரிமை கிடையாது எனவும், மேற்படி செல்போனை மனுதாரருடைய வசம் இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்குமாறும் மனுதாரர்/ எதிரி/செல்போன் உரிமையாளர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் புலன் விசாரணை அதிகாரியால், இவ்வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும், இம்மனுவை அனுமதித்தால் வழக்கு விசாரணையின்போது, செல்போனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கமாட்டார் என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றிய வழக்குச் சொத்தை சி.**பி.எண். 106/2026**–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். வழக்கு சொத்தை காவல் நிலைய பராமரிப்பில் வைக்க உத்தரவிடப்பட்டதன்பேரில் வழக்குச் சொத்து தற்போது காவல் நிலைய பராமரிப்பில் உள்ளது.

4) இருதரப்பு கூற்றையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி, மனுதாரரிடமிருந்து வழக்குச் சொத்தான போன் கைப்பற்றப்பட்டதை கருத்தில் கொண்டும், மனுதாரர் தான்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.18 15:22:58 +0530

சட்டப்படியான உரிமையாளர் என்று அவர் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும், மேற்படி மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் போனை இடைக்காலமாக மனுதாரர்/எதிரி வசம் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>**நிபந்தனைகள்:-**</u>

1. மனுதாரர் செல்போனின் நான்குபுறமும் நன்றாக தெரியும் வகையில், மனுதாரர் செலவில் தலைமை எழுத்தர் முன்னிலையில் புகைப்படம் எடுத்து குறுந்தகட்டுடன் (CD), பஞ்சநாமா தயாரித்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

2. ரூ.15,000/-த்திற்கு இரண்டு பிணையதாரர்கள் பிணையபத்திரம் எழுதித்தர வேண்டும்.

3. செல்போனை இந்நீதிமன்றம் உத்தரவிடும்போது திரும்ப இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. மேற்படி செல்போனை விற்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வேறு எந்த குற்றச்செயல்களில் ஈடுபடுத்தவோ கூடாது.

5.மேற்படி செல்போனை வேறு குற்ற வழக்கில் ஈடுபடுத்தமாட்டேன் என பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும்.

**முடிவாக,**

**மேற்கண்ட நிபந்தனைகளின்படி மனுதாரர் மனுசொத்தை இடைக்காலமாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கி சரிசெய்யப்பட்டு, இன்று **2026**-ம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் **18**-ம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/-) செல்வி.எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.18 15:23:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவையாறு.